ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2220/37 - 2021 මාර්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2021.03.23

2220/37 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல்

**பூல் புரூப் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமை**

திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும், 32 ஆம் பிரிவினால் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதிய, 2128/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 04/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் திருத்தப்பட்டு, பின்வரும் விதிகள் விதிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதிய 2164/72 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

1. 3 ஆம் விதியில்,

(அ) முதலாம் ஏற்பாட்டினை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் ஏற்பாட்டினைப் பதிலீடு செய்வதன் ஊடாக :

"ஆயின் எவ்வாறாயினும்,

(i) இறக்குமதியாளர் ஒருவர், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர், மற்றும்

(ii) உரிமம்பெற்ற உற்பத்தியாளர் ஒருவர், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர்,

II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள, தற்சமயம் இருப்பிலுள்ள மதுவரி அறவிடத்தக்க பொருட்கள் மீது ஒட்டுத்துண்டு ஒன்றை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்."

மற்றும்



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) இரண்டாம் ஏற்பாட்டினை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் ஏற்பாட்டினைப் பதிலீட்டு செய்வதன் ஊடாக :

"ஆயின் மேலும்,

(i) இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் தொடர்பில், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர், மற்றும்

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் உள்நாட்டு மதுபானங்கள் தொடர்பாக எனில், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர்,

II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி அறவிடத்தக்க ஒரு தொகைப் பொருட்களைக் கொண்டுள்ள வர்த்தகர் ஒருவர், மேற்கூறிய மதுவரி அறவிடத்தக்க பொருட்களின் மீது ஒட்டுத்துண்டு ஒன்றினை ஒட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்."

2. 2 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள "இருநூற்றைம்பத்தைந்து (255) நாட்கள்" எனும் சொற்கள் மற்றும் இலக்கங்களுக்குப் பதிலாக "முந்நூற்று நாற்பத்தேழு (347) நாட்கள்" எனும் சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பதிலீட்டு செய்வதன் ஊடாக.

**எஸ். ஆர். ஆட்டிகல,**
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, மாச்சு 23.

04-531

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.